பக்கங்கள் 25

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 12 ஞாயிற்றுக்கிழமை 28.09.2025 | அதிர்வு 58

## மக்களை ஏமாற்றிய என்.பி.பி. அரசாங்கம்

### சாடுகின்றார் நாமல்



“ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான என்.பி.பி. அரசு பொய் வாக்குறுதிகளை 04





# மனிதப் புதைகுழி விவகாரம்: சர்வதேசத்துடன் இணைந்து தடயவியல் விசாரணைகள்!

## ஜெனிவாவில் இலங்கை அரசு அறிவிப்பு

இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள மனிதப் புதைகுழிகள் விவகாரத்தில் சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து தடயவியல் விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

வலிந்து காணாமல்போனவர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் 29ஆவது அமர்வு கடந்த 22ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகிய நிலையில், இலங்கை தொடர்பான விவகாரம் நேற்றுமுன்தினம் ஆராயப்பட்டது.

இதன்போது, இலங்கை சார்பில் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமையிலான தூதுக் குழு கலந்துகொண்டது. 06

# கரூரில் விஜய் பிரசாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 39 பேர் சாவு!



21




முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமையை அடுத்து நாட்டில் எழுந்த உணர்வலைகளின் அடிப்படையில் எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டு பெரும் சக்தியாக திரள்வதற்கான வாய்ப்புகள் தென்பட்டன.

ஆனால் அந்த சூழ்நிலை இப்போது முழுமையாக அடிபட்டுப் போய்விட்டதாக தென்னிலங்கை அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

எதிர்க்கட்சித் தரப்புகளுக்கான தலைமை யாருக்குரியது என்ற போட்டியில் இந்த விவகாரம் அடியோடு அடிபட்டுப் போய்விட்டதாக அவர்கள் விளக்குகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 05

# அமெரிக்க வர்த்தக சபையின் உப தலைவருடன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சந்திப்பு

அமெரிக்க வர்த்தக சபையின் சிரேஷ்ட உப தலைவர் அதுல் கேஷப்பை சந்தித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சந்தித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்ற ஜனாதிபதி, இந்த சந்திப்பில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது, இருவரும் முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.







# சைப்ரஸ், ஆர்ஜென்டினா, ஸ்லோவேனியா ஜனாதிபதிகளுடன் ஜனாதிபதி அநுர சந்திப்பு

சைப்ரஸ் ஜனாதிபதி, ஆர்ஜென்டினா ஜனாதிபதி மற்றும் ஸ்லோவேனியா ஜனாதிபதி ஆகியோரை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சந்தித்துள்ளார்.

கடந்த 23 ஆம் திகதி Lotte New York Palace விருந்தகத்தில் அரச தலைவர்களுக்காக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வழங்கிய விசேட இரவு விருந்திலும் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

இதன்போதே, சைப்ரஸ் ஜனாதிபதி Nikos Christodoulides, ஆர்ஜென்டினா ஜனாதிபதி Javier Milei மற்றும் ஸ்லோவேனியா ஜனாதிபதி Nataša Pirc Musar ஆகியோரை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.



# ஊழல் எதிர்ப்புக் காரணமாக எதிர்க்கட்சிகளுக்கு உதறல்!

## அமைச்சர் நளிந்த காட்டம்



தேசிய மக்கள் சக்தி அரசின் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கையால் எதிர்க்கட்சிகளுக்கு உதறல் ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"சில ஒன்றிணைவுகள் அச்சம் காரணமாகவே ஏற்படுகின்றன. பாதாளக் குழு உறுப்பினர் கெஹேல்பத்தர பத்மே உள்ளிட்ட மூவரை இந்தோனேசியாவில் வைத்து நாங்கள் கைது செய்தபோது, அவர்கள் அடுக்குமாடிக் குடியிருப்பில் இருக்கவில்லை. மாறாக, கைது பயத்தில் "பெக்கோ சமன்" என்பவரின் வீட்டுக்குச் சென்று ஒளிந்திருந்தனர். இதனால் அனைவரையும் கூண்டோடு கைது செய்வதற்கு பொலிஸாரால் முடிந்தது. அவர்களுக்கு ஏற்பட்ட அச்சம் தான் அனைவரையும் ஒரே இடத்தில் ஒன்றுகூட வைத்தது.

அவ்வாறுதான் எதிர்க்கட்சிகளுக்கும் அச்சம் ஏற்பட்டுள்ளது. அந்த அச்சத்தால்தான் எதிர்க்கட்சியினர் ஓரணியில் இணைந்து வருகின்றனர். எதிர்க்கட்சிகளை திட்டமிட்டு ஒடுக்க வேண்டிய நோக்கமும் – தேவையும் எமக்கில்லை. ஆனால், எத்தனை தரப்புகள் ஒன்றாக இணைந்தாலும், சட்டம் நடைமுறையாகியே தீரும் – என்றார்.

# ஜனநாயகத்தைப் பாதுகாக்கவே ஒன்றுபட்டுள்ளன எதிரணிகள்!

## மொட்டுக் கட்சி கூறுகின்றது



ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நோக்கிலேயே எதிரணிகள் ஒன்றுபட்டுள்ளன என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ஜனநாயகத்தை மதிக்கும் கட்சி என்ற வகையிலேயே எமது கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆண்டு விழாவில் பங்கேற்றது. கட்சியின் சார்பில் பொதுச் செயலாளர் என்ற அடிப்படையில் நான் பங்கேற்றிருந்தேன்.

எமது கட்சிக்குரிய தனித்துவங்கள் மற்றும் கொள்கைகளை பாதுகாத்தபடியே நாம் பயணிக்கின்றோம்.

எனினும், நாட்டில் ஜனநாயகத்துக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. பல கட்சி முறைமையை இல்லாதொழித்து, எதிர்ப்பு அரசியல் நடத்துபவர்களை ஒடுக்கி, வடகொரியா போன்று ஜனநாயகம் அற்ற சூழ்நிலையை இங்கு ஏற்படுத்துவதற்கு பாரிய முயற்சி இடம்பெறுகின்றது.

இதற்கு ஓர் அங்கமாகவே அடக்குமுறை தலைவிரித்தாடுகின்றது. தமது கட்சி அலுவலகத்தில் இருந்தவர்களைப் பொலிஸ்/க்கு நியமித்து, தமது தேவைக்கேற்ப பொலிஸாரை பயன்படுத்துவதற்கு முற்படுகின்றனர். எனவேதான் ஜனநாயகத்தை பாதுகாக்கும் நோக்கில் எதிரணிகள் ஒன்றுபட்டுள்ளன." – என்றார்.

# லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுத் தலைவரின் சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை

லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் தலைவருக்கு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரின் சம்பளத்துக்கு சமமான சம்பளத்தை வழங்குமாறு அரசாங்க நிதி பற்றிய குழு ஜனாதிபதிக்குக் கோரிக்கை விடுத்துள்ளதாக, அந்த குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டில் லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் தலைவரினது வேதனத்தை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரின் சம்பளத்துக்கு சமன் செய்ய இணக்கம் காணப்பட்ட போதிலும், அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டுகிறார்.

2024 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரின் வேதனம் அதிகரிக்கப்பட்டுள்ளதால், 2025 ஆம் ஆண்டு ஜனவரி முதல் அமுலாகும் வகையில் லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுத் தலைவரின் சம்பளமும் அதற்கேற்ப அதிகரிக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா வலியுறுத்துகிறார்.



இதுவரை சம்பளத்தை அதிகரிக்காததால் லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதென குறிப்பிட்ட அவர், சம்பளத்தை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரியுள்ளதாக தெரிவித்தார்.

தற்போது, மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரின் வேதனத்துக்கும் லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் தலைவரின் சம்பளத்துக்கு இடையிலான வேறுபாடு இரண்டு மடங்காக உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலைமை ஊழலுக்கு எதிரான நிறுவனங்களின் அதிகாரிகளினது கௌரவத்தையும் செயல்திறனையும் பேணுவதற்குத் தடையாக அமையலாம் என்பது அரசாங்க நிதிப் பற்றிய குழுவின் நிலைப்பாடாக உள்ளது.

# மேல் மாகாணத்தில் அதிரடி வேட்டையில் துப்பாக்கிகள், வெடிமருந்துகள் சிக்கின!

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள், வெடிமருந்துகள் மற்றும் சில பொருட்களை மேல் மாகாண வடக்கு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பேலியகொடை மீன் சந்தைக்குச் செல்லும் வீதிக்கு அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்குப் பின்னால் உள்ள பகுதியில் இருந்து இந்தத் துப்பாக்கிகள் மற்றும் வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின்போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் கும்பலின் தலைவரான கெஹெல்பத்தர பத்மே என்பவரை விசாரணைக்குட்படுத்திய பின்னர், அவரிடமிருந்து பெறப்பட்ட தகவலக்கமைய இந்தப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று மேல் மாகாண வடக்கு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, குறித்த பகுதியில் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிறிய ரக துப்பாக்கிகள் மற்றும் வெடிமருந்துகள், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ரிவால்வர் ரக துப்பாக்கிகள், ரி – 56 ரக வெடிமருந்துகள், 52 ரி – 56 ரக உயிருள்ள வெடிமருந்துகள், சுயமாக இயக்கப்படும் துப்பாக்கிகள் மற்றும் இராணுவச் சீருடைகள் போன்றன கைப்பற்றப்பட்டுள்ளன என்று மேல் மாகாண வடக்கு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### மக்களை ஏமாற்றிய...

அளித்து மக்களை ஏமாற்றியுள்ளது. அதைத் தற்போது மக்களும் உணர்ந்துள்ளனர்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"திருடனும் மக்களோடு இணைந்து திருடனைப் பிடிப்பது போல் தான் என்.பி.பி. அரசும் செயற்படுகின்றது. அரசில் உள்ள பலரின் சொத்து விவரங்கள் தெரியப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டில் அண்மைக் காலமாக இடம் பெற்ற உப்பு, அரிசி மற்றும் கொள்கலன்கள் விடுவிப்பு ஆகிய மோசடிகளை மறைப்பதற்காகவே அரசு போதைப் பொருளை ஆயுதமாகப் பயன்படுத்துகின்றது. அரசின் உயர் அதிகாரத்தில் இருந்தவர்களே சுங்கத்தில் இருந்த சர்ச்சைக்குரிய கொள்கலன்களை விடுவிக்க அனுமதியளித்தனர். ஆளும் கட்சியின் இராஜாங்க அமைச்சர் கொள்கலன்கள் எங்கு கொண்டு செல்லப்பட்டன என்பது தனக்குத் தெரியும் எனக் கூறியுள்ளார்.

குறித்த கொள்கலன்கள் சுங்கப் பிரிவு மற்றும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையால் பரிசோதிக்கப்பட இருந்ததுடன், சர்வதேச புலனாய்வுப் பிரிவிடம் இருந்தும் தகவல்களும் கிடைத்திருந்தன. இந்நிலையில் அவை விடுவிக்கப்பட்டுள்ளன.

அரசு தொடர்ந்தும் எம் மீது குற்றம் சுமத்துவதை விடுத்து போதைப்பொருள் அடங்கிய 2 கொள்கலன்களையும், சோதனையிடப்படாத ஏனைய 323 கொள்கலன்களையும் விடுவிக்க அனுமதியளித்தது யார்? என்பதை விரைவில் வெளிப்படுத்த வேண்டும்.

எவ்வாறாயினும் எம் மீது பழி சுமத்தி இதிலிருந்து தப்ப முடியாது. ஒரு வருடத்தை எமது தரப்பைக் குற்றம் சாட்டியே கடந்து விட்டனர். மீதமுள்ள 4 வருடங்களையும் அவ்வாறே கடந்து விடுவார்கள். என்.பி.பி. அரசு பொய் வாக்குறுதிகளை அளித்து மக்களை ஏமாற்றியுள்ளது. அதைத் தற்போது மக்களும் உணர்ந்துள்ளனர்." – என்றார்.



# டெங்கு நுளம்பு பெருகும் சூழலை பேணிய 10 பேருக்கு 80 ஆயிரம் ரூபா தண்டப்பணம்

வல்வெட்டித்துறை நகரசபைக்குட்பட்ட பகுதியில் டெங்கு நுளம்பு பெருகும் சூழலினை பேணிய 10 உரிமையாளர்களிடம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தினால் 80 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட தொண்டமனாறு கிராம சேவையாளர் பிரிவில் பொதுச்சுகாதார பரிசோதகர் உள்ளிட்ட குழுவினரால் டெங்கு கட்டுப்பாட்டு களவிஜயம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது நுளம்பு பெருகக்கூடிய வாறான சூழலினை வைத்திருந்த 10 பேருக்கு எதிராக நேற்று முன்தினம் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் பொதுச்சுகாதார பரிசோதகர் பரமானந்த ராசா தினேஸினால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் நீதவான் நீதிமன்றினால் தலா 8000 ரூபா தண்டப்பணம் அடிப்படையில் 80000 ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இரகசியம் பரகசியம்...**

கைதானமையை அடுத்து அவர் சார்பான பரிதாபமான – ஆதங்கமான – உணர்வெழுச்சி வெளிப்பட்டமையால் எதிர்க்கட்சிகளின் கூட்டுத் தலைமை அவரிடமே போய்விடும் என்று அந்த விவகாரம் வெடித்த காலத்தில் இருந்தே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குழம்பிப் போயிருந்தார் எனக் கூறப்படுகின்றது. இந்தப் பின்புலத்தில் ரணிலின் தலைமையில் எதிர்க்கட்சிகள் ஒன்றுபடுவதற்கு இடம் அளிப்பதில்லை என சஜித் பிரேமதாஸ கங்கணம் கட்டிச் செயல்பட்டார் என்றும் கூறப்படுகின்றது.

எதிர்க்கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்ற கருத்து நிலைப்பாடு மக்கள் மத்தியில் வந்தாலும், அந்தத் தலைமையை சஜித் பிரேமதாஸவிடமோ அல்லது இளம் எதிரணித் தலைவரான நாமல் ராஜபக்ஷ விடமோ விடும் எண்ணம் ரணிலுக்கும் அடியோடு இல்லை என்றும் கூறப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் அப்போது எழுந்த மக்களின் உணர்வெழுச்சியைச் சாதகமாக பயன்படுத்தி எதிர்க்கட்சிகளை ஒன்றுபடுத்தி ஒரு வலிமையான கட்டமைப்பை உருவாக்கும் முயற்சி அது துளிர் விட்ட கையோடே அடிபட்டுப் போய் விட்டதாக அவதானிகள் கருதுகின்றனர்.

எல்லா எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைக்கும் விதத்தில் தமது ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டு விழாவை பெருத்த எடுப்பில் முன்னெடுக்க ரணில் அணியினர் எடுத்த முயற்சியும் வெற்றி பெறவில்லை என்பது வெளிப்படையானது. அந்தக் கூட்டத்துக்கு சஜித் பிரேமதாஸவோ அல்லது நாமல் ராஜபக்ஷவோ செல்லவில்லை.

பிற கட்சிகளைச் சேர்ந்த சுமார் நாற்பது அரசியல் பிரமுகர்கள் அந்த மாநாட்டுக்கு சென்றிருந்தனர். ஆயினும் அவர்கள் எவருமே இன்றைய நிலையில் பெரும் வாக்கு வங்கி ஆதரவு கொண்டவர்கள் அல்லர் என தெரிவிக்கப்படுகின்றது. ஆகவே அவர்களது வருகை அத்தகைய பெரிய மாற்றம் ஒன்றையும் அரசியல் வானில் ஏற்படுத்தவில்லை.

அந்தக் கூட்டத்தில் வைத்து எதிரணியினர் ஆயிரம் பொதுக்கூட்டங்களை கிராம மட்டத்தில் நடத்துவது என்ற யோசனையை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டாராயினும் அந்தத் திட்டத்தை கையில் எடுத்துத் தொடர்ந்து முன்னெடுக்கும் நடவடிக்கை எதுவும் – அதற்கான சாத்தியங்கள் எதுவும் – தென்படவே இல்லை என்பதுதான் கள நிலைமை.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டுக்கு வலிந்து வெற்றிலை வைத்து அழைத்தும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ போகவில்லை. 'ஊரில் நிகழ்வுகளுக்கு உடையார் தமது கைத்தடியை அனுப்பி வைத்தமை போல' தமது கட்சியின் செயலாளரை அனுப்பி விட்டு சஜித் அந்த நிகழ்வைப் பகிஷ்கரித்து விட்டார். அதேபோல சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் (மொட்டுக் கட்சியின்) தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவும் அந்தக் கூட்டத்துக்குத் தாமும் போகாமல் தமது கட்சிச் செயலாளரை அனுப்பி விட்டுத் தாமொதுங்கிக் கொண்டார்.

இதனால் அதிருப்தியுற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கடந்த திங்கட்கிழமை எதிர்க்கட்சிகளின் கூட்டுச் செயல்பாடு குறித்து ஆராய்வதற்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தமது எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கூட்டிய எதிர்க்கட்சிகளின் கூட்டத்தை பதிலடியாக ஐக்கிய தேசியக் கட்சியை முழுமையாக பகிஷ்கரிக்க வைத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையிலான பரஸ்பர நட்புறவு மீண்டும் முரணிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் பின்புலத்தில் எதிர்க்கட்சிகளின் ஒற்றுமைப்பட்ட செயற்பாடு என்பது குதிரைக் கொம்பாக மாறி வருகிறது.

இது ஆளும் தரப்புக்கு – ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவுக்குக் கொண்டாட்டம் தரும் ஒரு போக்குதான்...!

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**மனிதப் புதைகுழி...**

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் இலங்கையின் சட்ட ரீதியான நடவடிக்கைகளைப் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் குழுவின் நிபுணர்களின் குழு பாராட்டியது.

எனினும், நீண்டகாலமாக நிலவும் வரலாற்று ரீதியான கவலைகள், சட்டச் சிக்கல்கள் மற்றும் நடைமுறைச் சவால்கள் குறித்து ஆழமான கேள்விகளை எழுப்பியது.

காணாமல் போனவர்களின் எண்ணிக்கை சுமார் 12 ஆயிரத்து 600 என்று இருந்தாலும், உண்மையில் இந்த எண்ணிக்கை ஒரு இலட்சத்துக்கும் அதிகமாக இருக்கலாம் என்று சில மதிப்பீடுகள் தெரிவிப்பது குறித்துக் கவலை எழுப்பப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்ட வழக்குகளுக்கு மையப்படுத்தப்பட்ட தரவுத்தளம் இல்லாதது குறித்தும், மாநாட்டின் வழிகாட்டல்களுக்கு இணங்காத வகைப்பாடுகள் பயன்படுத்தப்படுவது குறித்தும் இதன்போது கேள்வி எழுப்பப்பட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் ஒரு தொடர்ச்சியான குற்றம் என்ற தன்மையை குற்றவியல் நடைமுறைச் சட்டம் அல்லது புதிய சட்டம் அங்கீகரிக்கவில்லை என்றும் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் குழுவின் நிபுணர்கள் சுட்டிக்காட்டினர்.

20 ஆண்டுகால காலாவதிச் சட்டம் எவ்வாறு நீதியைப் பாதிக்கும், பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டுவது எப்படி என்று பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் குழுவின் நிபுணர் கார்மென் ரோசா வில்லா குயின்டானா கேள்வி எழுப்பினார்.

புதிய வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சட்டத்தில் 'போர்க் குற்றங்கள்' மற்றும் 'மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள்' என்ற கருத்துக்கள் ஏன் சேர்க்கப்படவில்லை? இந்தக் குற்றங்களை விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்படுவது குறித்து அரசின் நிலைப்பாடு என்ன? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வழக்குகளில் ஒரு மேலதிகாரியின் உத்தரவை ஒரு பாதுகாப்பு முறையாகக் கொண்டு, குற்றமிழைத்த அதிகாரிக்குப் பொறுப்பில் இருந்து விலக்கு அளிக்கப்படுமா? இந்தச் சட்டம் உத்தரவிட்ட அல்லது தெரிந்திருந்த மேலதிகாரிகளின் பொறுப்பைப் பற்றிப் பேசுகின்றதா?

பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொலிஸாரின் காப்பகங்களை அணுகுவதில் ஒத்துழைப்பு இல்லை.

குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்களை வழங்க அவர்கள் மறுப்பதாகவும் அறிக்கைகள் குறித்து நிபுணர்கள் வினவினர்.

ஒத்துழைக்க மறுக்கும் படையினருக்கு என்ன தண்டனைகள் விதிக்கப்படுகின்ற என்றும் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் குழுவின் நிபுணர்கள் கேள்வி எழுப்பினர்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் அரசால் அச்சுறுத்தப்படுவது அல்லது



கண்காணிக்கப்படுவது குறித்துக் கவலை தெரிவிக்கப்பட்டது.

பழிவாங்கலுக்கு அஞ்சாமல் புகார்களைச் சமர்ப்பிப்பதை அரசு எவ்வாறு உறுதிப்படுத்தும்?

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் எப்போதும் நடைமுறைப் படுத்தப்படுவதில்லை என்றும், அதன் வருகைக்கான உரிமை சட்டத்தில் பொறிக்கப்படவில்லை என்றும் நிபுணர்கள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், வழக்கு விசாரணையின்றி அதிகபட்சமாகத் தடுப்புக் காவலில் வைக்க அனுமதிக்கப்படும் காலம் எவ்வளவு? என்றும் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் குழுவின் நிபுணர்கள் கேள்வி எழுப்பினர்.

ஆட்கடத்தலைத் தனித்த குற்றமாக ஏற்றுக்கொண்டமை வரவேற்கத்தக்கது.

ஆனால், புலம்பெயர்வு சூழலில் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் குறித்து அரசு எவ்வாறு விசாரிக்கிறது? எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகளுக்குப் பயிற்சி உள்ளதா? என்றும் கேள்வி எழுப்பப்பட்டது.

அத்துடன், மனித அல்லது பெயரிடப்படாத புதைகுழிகளில் காணப்படும் மனித எச்சங்களை மரபணு தரவு வங்கியில் உள்ள தகவல்களுடன் பொருத்துவதற்கு என்ன நடவடிக்கைகள் உள்ளன?

2008 காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் மூன்று கடற்படைத் தளபதிகளின் ஈடுபாடு, அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி மற்றும் காணாமல் ஆக்கப்படுதல் குறித்து தரவுகளைச் சேகரிக்கும் ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் போன்ற முக்கிய வழக்குகள் குறித்து என்ன விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் குழுவின் நிபுணர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த இலங்கைத் தூதுக்குழு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களைக் கையாளும் சட்ட அமைப்பு, நிறுவனங்களின் செயல்பாடு மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து கவனம் செலுத்துகின்றதாக அறிவித்தது.

வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான 2018 சட்டம் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது.

இதற்கு இணையாக இழப்பீட்டுச் சட்டம், காணாமல்போனோர் அலுவலகச் சட்டம் மற்றும் சாட்சிகள் பாதுகாப்புச் சட்டம் ஆகியவையும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களில் மேலதிகாரியின் உத்தரவை ஒரு குற்றவியல் பொறுப்பு விலக்காக ஏற்க முடியாது என்பதைச் சட்டம் தெளிவாக நிராகரித்துள்ளது.

மனித உரிமைகள் உடன்படிக்கை அமைப்புகளின் தகவல் தொடர்பு நடைமுறைகள் தொடர்பான அரசின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் ஒரு வழக்கு அடுத்த வாரம் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரவுள்ளது.

காணாமல்போனோர் அலுவலகத்திடம் சுமார் 23,300 காணாமல் போனோர் வழக்குகள் உள்ளன.

இதில் 3 ஆயிரத்து 700 இராணுவ அதிகாரிகள் மற்றும் சுமார் 16 ஆயிரம் பொதுமக்கள் அடங்குவர்.

காணாமல்போனவர்களில் சுமார் 93 சதவீதமானோர் ஆண்கள் என்றும், 33 சதவீதமானோர் 19 முதல் 35 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும் இலங்கை தூதுக் குழு தெரிவித்தது.

கொலை அல்லது தேசத்துரோகக் குற்றங்களுக்கு குற்றவியல் நடைமுறைக் கோட்டில் காலாவதி வரம்பு இல்லை.

வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் போன்ற சில குற்றங்களைத் தொடர்ச்சியான மீறல்கள் என உயர் நீதிமன்றம் ஏற்கனவே விளக்கமளித்துள்ளது.

பொலிஸாருக்கு எதிராகச் சித்திரவதைக் குற்றச்சாட்டுகள் இருந்தால், அந்த அதிகாரிகள் விசாரணைகளில் பங்கேற்கச் சட்டமா அதிபர் அனுமதி வழங்கமாட்டார் என்றும் அறிவித்துள்ளது.

2008 இல் கடற்படை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட வழக்கு இன்னும் விசாரணையில் உள்ளது.

சட்டமா அதிபர் அனைத்து வழக்குகளையும் சுதந்திரமான முறையில் நடத்துவதாகவும் இலங்கை தூதுக் குழு தெரிவித்தது.

மனிதப் புதைகுழிகள் தொடர்பான அனைத்து விசாரணைகளும் நீதித்துறையின் மேற்பார்வையின் கீழ், சட்டத்தரங்களின்படி நடைபெறுகின்றன.

சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து தடயவியல் விசாரணைகளை மேற்கொள்வதற்கும், குடும்பங்கள் மற்றும் தகுதி வாய்ந்த நிபுணர்களைச் செயல்முறையில் சேர்ப்பதற்கும் அரசு செயற்படுவதாகவும் இலங்கை தூதுக் குழு அறிவித்தது.

# ராஜபக்ஷக்களின் ஆட்சியில் முழுச் சுதந்திரம் இருந்ததாம்

## இப்படிப் புலம்புகின்றார் அம்பிட்டிய சுமணரத்ன தேரர்



"ராஜபக்ஷக்களின் ஆட்சிக் காலத்தில் வடக்கு – கிழக்கில் முழுச் சுதந்திரத்துடன் செயற்பட்டோம். தற்போதைய அரசின் ஆட்சியில் அவ்வாறு செயற்பட முடியாதுள்ளது."

– இவ்வாறு மட்டக்களப்பு ஸ்ரீ மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"நாட்டில் எந்தப் பகுதிக்குச் சென்றாலும், எப்படியான சவால்கள் வந்தாலும் எமது நாட்டின் வீரம் மிகுந்த தலைவர்கள் தொடர்பிலும், சிரேஷ்ட தலைவர்கள் தொடர்பிலும் நாங்கள் கதைப்போம். ஏனெனில் பௌத்த சாசனத்தை அவர்கள் பாதுகாத்துள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்திலும், கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலும் எமக்கு எவரிடமும் அடிபணிய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கவில்லை. வடக்கு, கிழக்கில் முதுகெலும்புடன் செயற்பட்டு பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தோம். அதேபோல், தொல்லியல் இடங்களைப் பாதுகாப்பதற்குரிய வேலைத் திட்டங்களையும் முன்னெடுத்தோம். ஆனால் தற்போது அவற்றின் மீதான பிடிமானங்களை இழந்துள்ளோம்.

இது தொடர்பாகக் கதைக்கும் போது எம்மை அரச எதிர்ப்பாளர் என்று கூறுகின்றனர். சில கட்சிகளுக்குச் சார்பாகச் செயற்படுகின்றோம் என்றும் விமர்சிக்கின்றனர்.

அரசியல் சாசனத்தைப் பாதுகாப்பதற்கான உரிமையை அரசு எமக்கு வழங்க வேண்டும்." – என்றார்.

# 170 பொலிஸ் அதிகாரிகள் உயர் நீதிமன்றில் மனு தாக்கல்

சமீபத்தில் 45 அதிகாரிகளுக்கு உதவி பொலிஸ் அத்தியட்சகர் பதவி உயர்வு வழங்கப்பட்டதில் தங்கள் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தீர்ப்பளிக்குமாறு கோரி, தலைமை பரிசோதகர்கள் மற்றும் பரிசோதகர்கள் உட்பட 170 பொலிஸ் அதிகாரிகள் அடங்கிய குழு, உயர் நீதிமன்றத்தில் மூன்று அடிப்படை உரிமைகள் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளது.

அந்த மனுக்கள், பொலிஸ் மா அதிபர், புதிதாக பதவி உயர்வு பெற்ற உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினர்களைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிடுகின்றன.



வரையறுக்கப்பட்ட போட்டித் தேர்வின் முடிவுகளைத் தொடர்ந்து கடந்த 25 ஆம் திகதி 45 அதிகாரிகள் உதவி பொலிஸ் அத்தியட்சகர்களாக பதவி உயர்வு பெற்றதாக சட்டத்தரணி மஞ்சுள பாலசூரிய தாக்கல் செய்த மனுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஒரு பரீட்சை வினாத்தாள் கசிந்ததாகவும், முடிவுகள் வேண்டுமென்றே தாமதப்படுத்தப்பட்டதாகவும், தொழில்முறை அனுபவத்தைப் பொருட்படுத்தாமல் கல்வித் தகுதிகளின் அடிப்படையில் மட்டுமே பதவி உயர்வு வழங்கப்பட்டதாகவும் மனுதாரர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

சேவை மூப்பு அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்ட கடந்த கால நிகழ்வுகளைப் போலல்லாமல், இந்த செயல்முறை முறைகேடுகள் மற்றும் தவறான நடத்தைகளால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மனுதாரர்கள் தங்கள் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக அறிவிக்கவும், பரீட்சை முடிவுகளைச் செல்லுபடியற்றதாக உத்தரவைப் பிறப்பிக்கவும் உயர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மாகாணத் தேர்தல்கள்

மாகாண சபைத் தேர்தல்களை நடத்தும்படியான அழுத்தம் இப்போது தென்னிலங்கையில் அதிகரித்து வருவது கண்கூடு.

இலங்கையின் சரித்திரத்தில் அதிகார பகிர்வுக்காக சட்ட ரீதியாக செய்யப்பட்ட ஒரே ஏற்பாடு மாகாண சபை முறைமை மட்டும்தான்.

அதனை நடைமுறைப்படுத்தும்படி நீண்ட காலமாகத் தமிழர் தரப்பில் இருந்து வலியுறுத்தல்கள் விடாது வந்த வண்ணம் இருக்கின்றன. இப்போது அது சற்று தீவிரமடைந்திருக்கின்றது.

ஆனால், மாகாண சபை தமிழர்களுக்கு அதிகாரத்தை பகிரும் விவகாரம் என்ற காரணத்தினால் அது குறித்து அதிகம் சிரத்தை காட்டாமல் இருந்த தென்னிலங்கை இப்பொழுது அது பற்றி அதிகம் குரல் எழுப்பு நிலை ஏற்பட்டிருக்கின்றது.

ஒரு காலத்தில் அதிகாரப் பரவலையும் மாகாண சபை முறைமையும் கடுமையாக எதிர்த்த தென்னிலங்கை அரசியல்வாதிகள் உட்பட தென்னிலங்கையில் இருக்கும் எதிர்க்கட்சித் தரப்பினர், பொதுக் கருத்தியலை உருவாக்கும் விமர்சகர்கள் எனப் பலரும் இப்போது இந்தத் தேர்தலை நடத்தும்படி அரசாங்கத்தை வலியுறுத்தத் தொடங்கி இருக்கின்றனர்.

அதிலும் முதலில் நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவிக்கான தேர்தலிலும், பின்னர் பொதுத் தேர்தலிலும் அடியோடு கோட்டை விட்டுவிட்ட எதிர்க்கட்சிகள், உள்ளூராட்சி தேர்தலில் சற்று எழுந்து நின்றமையால், அடுத்து மாகாண சபைத் தேர்தலை எதிர்கொண்டு தங்கள் நிலையை சற்றேனும் மேலும் உறுதிப்படுத்த ஒரு வாய்ப்பாக அதனை எதிர்பார்த்து, அதனை வலியுறுத்தி நிற்கின்றன என்பதும் தெளிவானது.

ஒரு காலத்தில் மாகாண சபை முறைமையையும், அது கொண்டுவரப்படக் காரணமாக இருந்த இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையும் சேர்த்துக் கருத்தியல் ரீதியாகவும் செயற்பாட்டு ரீதியாகவும் மோசமாக எதிர்த்த ஜே.வி.பியின் கைகளில்தான் இன்று ஆட்சி அதிகாரம் உள்ளது. அந்த மாகாண சபைத் தேர்தலை நடத்துவதா, இல்லையா என்பதை தீர்மானிக்கும் பொறுப்பும் அதிகாரமும் கூட முழுமையாக அதன் கைகளில்தான் விழுந்து உள்ளன.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது என்ற விவகாரம் எப்படி கடந்த முப்பது ஆண்டுகளாக பேச்சளவில் கூறப்பட்டு, நடைமுறை அளவில் செயல்படுத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றதோ அதுபோல, இந்தத் தேர்தலையும் பேச்சளவில் நடத்துவதாகக் கூறிக் கொண்டு ஜே.வி.பி. இழுத்தடிக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் உருவான காலத்திலும், 13 ஆம் திருத்தம் கொண்டு வரப்பட்ட காலத்திலும் தங்களுடைய பங்களிப்பும் ஈடுபாடும் உரிய முறையில் பெற்றுக் கொள்ளப்படவில்லை, கருத்தில் கொள்ளப்படவில்லை, உள்வாங்கப்படவில்லை என்று கருதும் முஸ்லிம்கள், இப்போது மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பில் ஓர் அதீதமான மௌனத்தை பேணிக் கொண்டிருக்கிறார்கள். தேர்தலை வலியுறுத்தி அவர்கள் தரப்பில் இருந்து அழுத்தங்கள் போதிய அளவில் வருவதாகத் தெரியவில்லை.

ஆயினும், இந்த மாகாண சபை முறைமை கிழக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட போது அதைத் தந்திரமாக பயன்படுத்தி, அதிகாரத்தைப் பெற்று, பல விடயங்களை செய்தவர்கள் அவர்கள்தான்.

இப்போது தங்களுக்குள் பிரிந்து நிற்பதால் எந்த மாகாண சபையிலும் ஆட்சி அதிகாரம் தங்களுக்கு வருவதற்கான வாய்ப்பு இல்லை என்று கருதி அவர்கள் அவ்வாறு அதீத மௌனம் பேணுகிறார்களோ என்பதையும் நோக்க வேண்டியுள்ளது.

எது, எப்படி என்றாலும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் மாகாண சபைகளுக்குரிய அடிப்படை விடயங்களைக் கூட அந்தந்தப் பிரதேசங்களின் பிற அரசியல் தரப்புகளின் கலந்தாலோசனையின்றி, தான்தோன்றித்தனமாக நடவடிக்கை எடுத்து, சிக்கல்களை ஏற்படுத்தும் இந்த நிலைமை தொடராமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக இந்த மாகாண சபை தேர்தல்களை விரைந்து நடத்தியாக வேண்டும். அப்போதுதான் பகிரப்பட்ட அதிகாரங்கள் தொடர்பான விடயத்தில் மக்களின் இறைமை சரியாகப் பிரயோகிக்கப்படும் நிலைமை உறுதியாகும்.

# தரம் 9 இற்கு உட்பட்ட தனியார் வகுப்புகளை ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடத்துவதற்குத் தடை!

## யாழ். மாநகர சபை உறுப்பினர் சுகிர்தராஜ் சரஸ்வதி பிரேரணை முன்வைப்பு

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமைகளிலும் தரம் 9 இற்கு உட்பட்ட மாணவர்களுக்கான தனியார் வகுப்புக்கள் நடத்தத் தடை விதிக்கப்பட வேண்டும். வெள்ளிக்கிழமைகளில் ஏற்கனவே அறநெறி மாணவர்களது நலன் கருதி இந்த விடயம் நடைமுறையில் உள்ளது.

மாணவர்களது நலனைக் கருத்தில் கொண்டு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வகுப்புத் தடைகளுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ். மாநகர சபை உறுப்பினரும் ஊடகவியலாளருமான சுகிர்தராஜ் சரஸ்வதி பிரேரணை முன்வைத்துள்ளார்.

யாழ். மாநகர சபையின் நான்காவது மாத அமர்வு வியாழக்கிழமை (25) இடம்பெற்றது. இந்த அமர்வில் "தரம் 9 இற்கு உட்பட்ட தனியார் வகுப்புகளை ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடத்துவதற்குத் தடை!" என்னும் தலைப்பிலான பிரேரணையை முன்வைத்து உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயர்தர மாணவர்களுக்கான வகுப்புகள் அதிகம் சனி, ஞாயிறு தினங்களில் நடத்தப்படுகின்ற நிலையில், தேவை ஏற்படின் உயர்தர வகுப்புகளுக்கும் விதிவிலக்கு அளிக்க முடியும்.

தரம் 9 இற்குக் கீழ் உள்ள மாணவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமையை ஓய்வு நாளாக்கி, விடுமுறை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஒரு நாளிலாவது மாணவர்கள் வீடுகளில் நின்று ஓய்வு எடுக்கவும் அவர்களது சுய சுத்தம் பேணவும் இது வசதியாக இருக்கும்.




ஒரு நாள் கூட ஓய்வு இல்லாது மாணவர்கள் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகி வருகின்றனர.

இந்த விடயம் ஏற்கனவே யாழ். அரச அதிபரால் மாவட்ட மட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள போதும் இது நடைமுறையில் இல்லை என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதேவேளை, ஆரோக்கியமான ஒரு சமூகத்தை உருவாக்க சமய விழுமியங்கள் மற்றும் ஒழுக்கம்மிக்க வாழ்க்கை முறையை உறுதி செய்ய வெள்ளி, ஞாயிற்றுக் கிழமைகளில் தனியார் பிரத்தியேக வகுப்புகளை நிறுத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநரிடம் யாழ். மாவட்ட சர்வமதப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளதும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியது.

ஆளுநரிடம் விடுக்கப்பட்ட அவர்களது கோரிக்கையில், வெள்ளிக்கிழமைகளில் பாடசாலை வேளைக்குப் பின்னரும் ஞாயிற்றுக் கிழமைகளில் மதியத்துக்கு முன்னரும் பின்னரும் தனியார் பிரத்தியேக வகுப்புகளை முழுமையாக நிறுத்தி, மாணவர்கள் சமய விழுமியங்களைப் புரிந்து வழிபடவும் வாழவும் உரிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தரவேண்டும்.

விரக்தி, தற்கொலை, போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாதல், வன்முறை வாள் வெட்டு என்பன அதிகரித்துவரும் சமகால சூழ்நிலையில் ஆரோக்கியமான ஒரு சமூகத்தை உருவாக்க சமய விழுமியங்கள் மற்றும் ஒழுக்கம்மிக்க வாழ்க்கை முறையை உறுதி செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம்.

தனியார் பிரத்தியேக வகுப்புகளை, குறைந்தது தரம் 10 இற்கு உட்பட்ட வகுப்புகளையாவது, வெள்ளி மற்றும் ஞாயிறுகளில் நிறுத்தி, நல்ல ஒரு ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் யாழ். மாவட்ட சர்வமதப் பேரவை ஆளுநரிடம் விடுத்துள்ள கோரிக்கையில் தெரிவித்துள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது என்று தெரிவித்தார்.

இவரது பிரேரணைக்குச் சமையில் அமேக ஆதரவு கிடைக்கப்பெற்ற நிலையில் விரைந்து இதற்கான நடவடிக்கையை முன்னெடுக்குமாறும் ஏனைய உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் திருமதி ப. யோகேஸ்வரி, தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் சு. கபிலன் ஆகியோர் இந்த விடயம் மிகவும் தேவைப்பாடு உடையது. இந்த விடயத்தை ஆளுநருக்கு அனுப்பி இதற்கான துணை விதிகள் உடனடியாக உருவாக்கப்பட்டு விரைந்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று தெரிவித்தனர்.

# சுகாதார விதிமுறையை பின்பற்றாத உணவகத்திற்கு சீல் வைக்கப்பட்டது

பருத்தித்துறையில் சுகாதார விதிமுறைகளை பின்பற்றாத 3 உணவு கையாளும் நிலையங்கள் தொடர்பான வழக்கில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த கட்டளையின் அடிப்படையில் ஒரு உணவகத்திற்கு சீல் வைக்கப்பட்டுள்ளதுடன், தண்டப் பணமும் அறவிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபையினது ஆளுகைக்குட்பட்ட பகுதியில் சுகாதார விதிமுறைகளை பின்பற்றாத 3 உணவு கையாளும் நிலையங்களுக்கு எதிராக பருத்தித்துறை நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகரினால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது 3 உரிமையாளர்களும் தம்மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில்



37000 ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டதுடன், சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகத்தினை உடனடியாகவே சீல் வைத்து மூடுவதற்கு மன்று கட்டளையிட்டது.

இதையடுத்து மேற்படி உணவகத்திற்கு பருத்தித்துறை நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் பரமானந்தராசா தினேஸினால் சீல் வைக்கப்பட்டுள்ளது.



# நிலையான பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புகின்றோம்

## ஜப்பானில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உரை

தொடர்ச்சியான சவால்களை எதிர்கொண்ட இலங்கை தற்போது நிலைபேறான மற்றும் பங்கேற்புப் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புகின்றது எனவும் அந்த சுபீட்சத்தின் மூலம் அனைத்துப் பிரஜைகளினதும் வாழ்க்கைத் தரம் மேம்படுத்தப்படும் என்பதை உறுதிசெய்வதாகவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் ஒசாகா நகரில் நடைபெறும் “எக்ஸ்போ 2025“ உலகக் கண்காட்சியில் நேற்று நடைபெற்ற இலங்கை தின நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டார்.

நட்புறவு, பொதுவான இலக்குகள் மற்றும் பொருளாதார மாற்றத்திற்கான இலங்கையின் அர்ப்பணிப்பு ஆகியவற்றை ஜனாதிபதி தனது உரையில் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேலும் உரையாற்றுகையில்,

“நட்புறவு என்பது மனிதகுலத்தின் விலைமதிப்பற்ற பிணைப்புகளில் ஒன்றாகும். இது தனிநபர்கள், சமூகங்கள் மற்றும் கலாசாரங்களை இணைத்து, எல்லைகளைக் கடந்து, ஒரு சிறந்த உலகை உருவாக்க நாடுகளை ஒன்றிணைக்கிறது.

“எக்ஸ்போ 2025“ கண்காட்சி, பரஸ்பர நட்புறவு, நல்லிணக்கம், கலாசார பன்முகத்தன்மை மற்றும் மனித விழுமியங்களை வெளிப்படுத்த 150 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு வாய்ப்பளிக்கும் ஒரு உலகளாவிய தளமாகச் செயல்படுகிறது.

இலங்கையின் பாரம்பரியத்தின் செழுமையை மட்டுமல்லாமல், நிலைபேறான, வலிமையான மற்றும் எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் தேசம் என்ற எமது தெளிவான நோக்கையும் இங்கு நாம் உலகிற்கு முன்வைக்கிறோம்.

எக்ஸ்போ 2025 இல் இலங்கையின் பங்கேற்பு, நவீன மற்றும் உற்பத்தி சார்ந்த பொருளாதாரத்தை நோக்கி நகரும் ஒரு தீர்க்கமான பொருளாதார மாற்றத்திற்கான நாட்டின் அர்ப்பணிப்பை நிரூபிக்க ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

குறிப்பாக, தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா, விவசாயம் மற்றும் கடல் வளங்களின் நிலைபேறான பயன்பாடு போன்ற அதிக திறன் கொண்ட துறை



களை வளர்ப்பதற்கான இலங்கையின் கொள்கையை இது பிரதிபலிக்கிறது.

சவால்களைத் தொடர்ந்து எதிர்கொண்ட நாம், இப்போது நிலைபேறான மற்றும் பங்கேற்பு பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புகிறோம். இதன் மூலம் அபிவிருத்தியின் பலன்கள் பரவலாகப் பகிரப்படுவதையும், அனைத்துப் பிரஜைகளினதும் வாழ்க்கைத் தரம் மேம்படுத்தப்படுவதையும் உறுதி செய்வோம்.” என்று ஜனாதிபதி உறுதியளித்தார்.

இதனிடையே ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்பு பல நூற்றாண்டுகள் பழமையானது என்றும், கடினமான காலங்களிலும் ஜப்பான் ஆதரவளித்து வருவதாகவும் ஜனாதிபதி நினைவூட்டினார்.
































# திருமலையில் 5 மாணவர் கொலைக்கு நீதி வேண்டி போராடிய தந்தையின் நினைவஞ்சலி நிகழ்வு நேற்று

(எஸ்.கீதபொன்கலன்)

2006 இல் திருகோணமலை கடற்கரையில் நடைபெற்ற ஐந்து மாணவர்கள் படுகொலைக்கான நீதியைக்கோரி போராடிய – கொலையுண்ட மாணவர்களில் ஒருவரான மனோகரன் ரஜீகரின் தந்தையான – டாக்டர்.காசிப்பிள்ளை மனோகரனின் நினைவஞ்சலி நிகழ்வு நேற்று திருகோணமலை நகரசபையின் பொது மண்டபத்தில் நடைபெற்றது.

“சர்வஜன நீதி” என்ற அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், திருகோணமலை மாநகரசபை மேயர் க.செல்வராஜா மற்றும் அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள். பொதுமக்கள் ஆகியோர் பங்குபற்றினர்.

சர்வஜன நீதி அமைப்பின் அமைப்பாளர் சட்டத்தரணி பவானி பொன்சேகா, நிகழ்வில் டாக்டர்.மனோகரனின் நீதிக்கான போராட்டத்தின் படிமுறைகளை விளக்கி உரையாற்றினார்.

அதனை அடுத்து இவ் மாணவர் படுகொலைகள் தொடர்பில் அக்காலத்தில் நீதிமன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உட்பட பலர் உரையாற்றினர்.













# திருமலையில் மகன் கொல்லப்பட்ட இடத்திலேயே டாக்டர் மனோகரனுக்கான நினைவேந்தல் நிகழ்வு

திருகோணமலை 5 மாணவர் படுகொலைக்காக நீதி கோரி போராடி உயிர்நீத்த வைத்தியர் மனோகரனுக்கான நினைவுதின நிகழ்வு நேற்று மாலை திருகோணமலையில் இடம்பெற்றது.

திருகோணமலை கடற்கரையில் 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட 5 மாணவர்களில் வைத்தியர் மனோகரனின் மகனும் ஒருவர். குறித்த படுகொலைக்கான நீதியைக் கோரி சர்வதேச ரீதியிலும் போராடி வந்த வைத்தியர் மனோகரன் வயது மூப்பின் காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னாருக்கான நினைவேந்தல் நிகழ்வு நேற்று சனிக்கிழமை அந்த் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட அதே இடத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் மற்றும் தமிழரசுக் கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், தலைவர் சி.வி.கே சிவஞானம் மற்றும் பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வைத்தியர் மனோகரனின் ஆத்ம சாந்தி வேண்டி விளக்கேற்றி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.




































# மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று ஊடகவியலாளர்களின் செயலமர்வு

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் மாவட்ட ஊடகப் பிரிவின் ஒருங்கிணைப்புடன் இலங்கைப் பத்திரிகைப் பேரவை ஏற்பாடு செய்த ஊடகவியலாளர்களுக்கான முழு நாள் செயலமர்வொன்று நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்றது.

"சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் ஊடகவியலாளர்களின் பங்கு" எனும் தொனிப்பொருளில் மாவட்ட ஊடகவியலாளர்களுக்காக நேற்று சனிக்கிழமை மட்டக்களப்பு, பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற செயலமர்வை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரின் பிரதிநிதியாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்ஷனி ஸ்ரீகாந்த் தலைமை தாங்கி நடத்தினார். நிகழ்வில் இலங்கை பத்திரிகைப் பேரவையின் தலைவர் பீ.ஆர்.விஜயபண்டார பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

இச்செயலமர்வில் திருகோணமலை பல்கலைக்கழக தொடர்பாடல் மற்றும் வணிக ஆய்வு பீடத்தின் விரிவுரையாளர் ஜோயல் ஜெய்ருஸ் ரவிச்சந்திரன் மற்றும் தினகரன், வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான தேவதாசன் செந்தில்வேலவர் ஆகியோர் விரிவுரையாற்றினர்.

இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் உதவி ஆணையாளர் சுரேசான்ன இரங்க, மட்டக்களப்பு மாவட்ட தகவல் அதிகாரி வடிவேல் ஜீவானந்தன் ஆகியோரின் இணைப்பாக்கத்தில் இச்செயலமர்வு இடம்பெற்றது, செயலமர்வில் மாவட்டத்தில் அரச மற்றும் தனியார் ஊடகங்கள், சமூக ஊடக வலையமைப்புக்கள் போன்றவற்றின் ஊடகவியலாளர்கள், சுயாதீன ஊடகவியலாளர்கள், மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களிலும் இடம்பெறும் அரச நிகழ்வுகளை அறிக்கையிடும் உத்தியோகத்தர்கள் என 70 இற்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.













# யாழ்ப்பாணம் பழைய பூங்காவின் எஞ்சிய பகுதியும் அழியும் ஆபத்து

## உள்ளக விளையாட்டரங்கு உருவாக்கம் என்ற பெயரில்?

- நடராசா லோகதயாளன் -

யாழ்ப்பாணம் மாநகரத்தின் ம்த்தியில் எஞ்சியிருக்கும் ஒரேயொரு பசுமை தளமாக் இருக்கும் பழைய பூங்காவின் மிச்சமாயிருக்கும் பகுதியும் உள்ளக விளையாட்டரங்கு என்னும் பெயரில் அழிக்கப்படவுள்ளது என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியிருக்கின்றது.

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வளாகத்தில் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு – விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கூட்டமானது யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர்

மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் கடந்த 25ஆம் திகதி மாலை 05.00 மணிக்கு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர் பழைய பூங்காவில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவில் உடற்பயிற்சிக்கான நடைபாதையினை மேம்படுத்துவதற்கும், சிறுவர்கள் விளையாடும் போது அவர்களுடன் வருகை தரும் பெற்றோர்கள் உடற்பயிற்சி செய்வதற்கான உபகரணங்களை பொருத்துவதற்குமான மதிப்பீடுகளை உள்ளடக்கிய முன்மொழிவினை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளரை கேட்டுக்கொண்டுள்ளார் எனவுன், அதற்கான முன்மொழிவு கிடைத்தவுடன் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் நிதியினை பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மேலும், விளையாட்டுப் பாடசாலையான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைகள் தொடர்பாகவும் அரசாங்க அதிபர் ஆராய்ந்தார்.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே.சிவகரன், பிரதம கணக்காளர் எஸ்.கிருபாகரன், திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், பிரதம பொறியியலாளர் க.திருக்குமார், உதவி மாவட்டச் செயலாளர் செல்வி உ.தர்ஷினி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர், புவிச்சரிதவியல் உதவிப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் திருமதி சி.எஸ்.ஆர்.செல்வகுணாளன், பாடசாலை அபிவிருத்திச் சங்க பொருளாளர் ஆர்.ஜனதன், மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் எல்.அனுராகாந்தன், விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதிநிதி தனராஜ், விளையாட்டு உத்தியோகத்தர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் கட்டடக் காடுகளின்

மத்தியில் காணப்படும் ஒரேயொரு பசுமை நுரையீரலாக தொழில்பட்டு வாயுப் பரிமாற்றத்திற்கான காபனீர்ஒட்சைட்டை உறிஞ்சி ஒட்சிசனை வெளியிடும் ஒரு தொழிற்சாலை போன்று செயல்படுகின்ற ஒரு பிரதேசம் இதுவாகும்.

உலகில் நகரங்களின் மத்தியில் குறுங்காடுகள் அமைக்கப்படுகின்றன. இங்கே மட்டும்தான் இருக்கும் ஒரேயொரு குறுங்காட்டையும் அழிக்கத் திட்டமிடப்படுகின்றது.

உண்மையில் பழைய பூங்காவானது ஆங்கிலேயர் காலத்தில் மீளப் பெறமுடியாத அழியா நன்கொடையாக வழங்கப்பட்ட 9.6710 ஹெக்டேயர் நிலப்பரப்பைக்கொண்ட நீண்ட வரலாறு கொண்டதாகும்.

இந்த 9.67 ஹெக்டேயர் நிலப்பரப்பிற்குள் தற்போது ஆளுநர் செயலகம், நில அளவைத் திணைக்களம், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, இலங்கை மின்சார சபை, தேர்தல் திணைக்களம், யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்ட சம்மேளனம், தொல்லியல்த் திணைக்களம் ஆகியவற்றுடன் மாவட்டச் செயலகத்தின் கீழான 6 பிரிவு அலுவலகங்களுடன் யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் என 13 அலுவலகங்களும் ஓர் சிறுவர் பூங்காவும் வந்துவிட்டன.

இன்று வெறுமனே 5.1916 ஹெக்டேயர் நிலப்பரப்பு மட்டுமே வெற்று நிலமாக உள்ளது. இங்கே அலுவலகம் அமைத்துள்ள எந்தவொரு அரச திணைக்களத்திற்கும் நிலம் உரிமை மாற்றம் செய்யப்படவில்லை எனவும், அவை அனைத்துமே மாவட்டச் செயலகத்தின் ஆளுகையிலேயே உள்ளன என்பது மாவட்டச் செயலகம் தகவல் அறியும் உரிமைச்

தொடர்ச்சி▼



# யாழ்ப்பாணம் பழைய பூங்காவின் எஞ்சிய பகுதியும் அழியும் ஆபத்து

## உள்ளக விளையாட்டரங்கு உருவாக்கம் என்ற பெயரில்?

தொடர்ச்சி▲

சட்டத்தின் கீழான பதிலில் தெரிவித்துள்ளது.

அவ்வாறு மாவட்டச் செயலகத்தின் ஆளுகையில் இருந்தாலும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணம மாவட்டத்துக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தலம் அமைப்பதற்காக மீளப்பெறமுடியாத நன்கொடையாக இது வழங்கப்பட்டதாகவே மாவட்டச் செயலகத்தின் பதிவேடுகள் கூறினாலும் அவர்களிடமும் ஆவணங்கள் எவையும் இருப்பதாகத் தெரியவில்லை.

இது, அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பிரசித்த நொத்தாரிசு ஜோன் டீ நைஸ் என்ற முகதாவால் 1852-06-21 இல் 1607 ஆம் இலக்கத்திலும் 1846-09-19 அன்று 547 இலக்கத்திலும், 1853-03-13 அன்று 1721 ஆம் இலக்கத்திலும் நிறைவேற்றப்பட்ட அழியா நன்கொடை உறுதிகள் மூலம் வழங்கப்பட்டதாக அறிய முடிகின்றது என்றுதான் மாவட்டச் செயலகத்திடம் தொடுக்கப்படும் வினாவிற்கு பதிலளிக்கப்படுகின்றது.

அவ்வாறானால் மாவட்டச் செயலகத்திடமும் முழுமையான ஆவணம் இல்லாத ஒரு இடத்தையே இன்றுவரை கூறுபோட்டு வரும் நிலையில் தற்போது உள்ளக விளையாட்டரங்கு என்னும் மெயரில் அப்பகுதியில் எஞ்சியிருக்கும் பசுமையும் அழிக்கப்படும் அபாயமே உள்ளது.

1990 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரை இப் பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சமயம் விடுதலைப் புலிகளின் புதிய போராளிகளின் பயிற்சி மையமாகவும் பின்னர் தமிழீழ காவல்துறை உருவாக்கத்தின்போது காவல்துறையின் முதலாவது அணிக்கான பயிற்சியில் இருந்து முதல் 5 அணிகளிற்கான பயிற்சி மையமாகவும் செயல்பட்ட காலத்திலும் அவர்களின் நிர்வாகச் செயல்பாட்டிற்கு சில கட்டட அமைப்புக்கள் தேவைப்பட்டபோது இயற்கையே எமது நண்பன் என்பதனை 1987 முதல் 1990 வரை பட்டறிவை மனதில் வைத்து எந்தவொரு இயற்கை அழிப்பிற்கும் இடமளிக்கவில்லை. இங்கே காணப்படும் சிறிய இடைவெளிகளில் சாதாரண கட்டுமானம் மட்டுமே அமைக்க முடியும் என தலைமையால் அப்போது கண்டிப்பான கட்டளை பிறப்பிக்கப்பட்டு பேணிப் பாதுகாக்கப்பட்ட பிரதேசம் இன்று இறைச்சிக் கூறுகளாக பங்கீடு செய்யப்படுகின்றது. இவ்வாறு பேணப்படும் பகுதியில் தற்போது உள்ளக விளையாட்டு மைதானம் வேண்டுமா இல்லையா என்பதுதான் கேள்வியாக முன் வைக்கப்படுகின்றது.

(தொடரும்)





# தனது பெயர்ப் பதாகையைக் கிழித்து எறிந்து சபையில் எதிர்ப்பு வெளியிட்ட உபதவிசாளர்

## சாவகச்சேரிப் பிரதேசபை அமர்வில் சம்பவம்

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பிரதேசசபையின் உப தவிசாளர் இ.யோகேஸ்வரன் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றிருந்த சபை அமர்வின் தனது பெயர் பதாகையைக் கிழித்து எறிந்து தனது எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

சபை எல்லைக்குட்பட்ட பிரதேசம் ஒன்றில் வீதி புனரமைப்புப் பணியின் போது மக்களின் கோரிக்கை மற்றும் சபையின் முடிவு ஆகியவற்றை கருத்திற்கொள்ளாது தொழில்நுட்ப உத்தியோகத்தர் செயற்பட்டிருக்கின்றார் எனச் சுட்டிக்காட்டிய உப தவிசாளர் யோகேஸ்வரன் இப்படிப்பட்ட நிலையில் தனக்கு "கௌரவ" என்ற பட்டம் தேவையில்லை எனக் கூறி தனது மேசையில் இருந்த பெயர் பதாகையை இரு துண்டங்களாக கிழித்து வீசி எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

அத்துடன் ஏனைய சபை உறுப்பினர்களும் சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தருடைய செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்தி மனப்பான்மையை வெளியிட்டதுடன் தவிசாளர் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட தவிசாளர் குகதாசன் உத்தியோகத்தர்கள் ஒத்துழைப்பு வழங்காத பட்சத்தில் தன்னால் எதுவும் செய்ய முடியாது எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கேப்பாப்புலவில் ராணுவத்தின் பிடியிலுள்ள காணிகளை உடனடியாக விடுவிப்புச் செய்க!

## நாடாளுமன்றத்தில் ரவிகரன் எம்.பி வலியுறுத்து

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு கேப்பாப்புலவில் இராணுவத்தின் பிடியிலுள்ள மக்களுக்குரிய 190 ஏக்கர் காணிகளை விடுவிப்புச்செய்வதுடன், அகதி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் கேப்பாப்புலவு மக்களை உடனடியாக அவர்களின் பூர்வீக வாழிடங்களில் மீளக்குடியமர்த்துமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்விடயம் தொடர்பில் பேசியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

கேப்பாப்புலவு மக்கள் பாரிய போராட்டங்களை நடாத்தியதன் மூலமாக இராணுவத்தின் கையகப்படுத்தலில் இருந்த பெருமளவான மக்களின் காணிகள் கடந்த காலங்களில் விடுவிக்கப்பட்டன.

ஆனால் தற்போதும் 190 ஏக்கர் அளவில் கேப்பாப்புலவு மக்களுடைய பூர்வீக காணிகள் விடுவிக்கப்படாமலுள்ளன. அந்தக்காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்.

இந்தக் கேப்பாப்புலவு காணி விடுவிப்புத் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட செயலாளரிடம் கேட்டால் கூடிய விரைவில் அவை விடுவிக்கப்படுமென தொடர்ந்து தெரிவித்துக்கொண்டிருக்கின்றார். அதேபோல் அமைச்சர்கள் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வரும்போது கேட்டால் அவர்களும் அதே பதிலையே கூறுகின்றனர். அதேபோல் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் உபாலி சமரசிங்கவிடமோ அல்லது வன்னி மாவட்ட அரசாங்கத் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடமோ கேட்டால் அவர்களும் கூடிய விரைவில் கேப்பாப்புலவு காணிகள் விடுவிக்கப்படுமெனத் தெரிவிக்கின்றனர்.

ஆனால் அந்தக் கேப்பாப்புலவு



காணிகள் இதுவரை விடுவிக்கப்படவில்லை. இந்நிலையில் கேப்பாப்புலவை பூர்வீகமாகக்கொண்ட 60குடும்பங்கள் அளவில் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் அவலவாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். கேப்பாப்புலவு மக்களுக்கு ஏன் இந்த அகதி வாழ்வு எனும் அவல நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனவே தயவுசெய்து கேப்பாப்புலவு மக்களை உடனடியாக அவர்களுடைய பூர்வீக வாழிடங்களில் மீள்குடியேற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.



# அநுரவின் பலஸ்தீனத்துக்கான அறிவிப்பும் ஈழத் தமிழர்களும்!



புருஜோத்தமன் தங்கமயில்

பலஸ்தீன தேசத்தை அங்கீகரிப்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தன்னுடைய ஐக்கிய நாடுகள் பொதுச் சபை உரையில் தெரிவித்திருக்கிறார். இலங்கை அரச தலைவர் ஒருவர், பலஸ்தீன தேசத்தை அங்கீகரிப்பதாக சர்வதேச அமர்வொன்றில் அறிவித்திருப்பது இதுவே முதற்தடவை. மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் பலஸ்தீனத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டினை அவர்களின் அரசியல் ஆரம்ப காலகட்டங்களில் வெளிப்படுத்தியிருந்தாலும், அரச தலைவராக நின்று பலஸ்தீன அங்கீகாரம் பற்றி, உத்தியோக பூர்வ நிலைப்பாடுகளை எடுத்தவர்களல்லர். மாறாக, இஸ்ரேலுடன் நெருக்கமான உறவுகளைப் பேணுவதிலேயே கவனமாக இருந்திருக்கிறார்கள். அதற்கு, இஸ்ரேலிடம் ஆயுத உதவிகளை எதிர் பார்த்து இலங்கை அரசு கடந்த காலங்களில் இருந்திக்கின்றது என்பது காரணமாகும். நாட்டில் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து 16 ஆண்டுகள் கடந்து விட்ட போதிலும், இலங்கை இஸ்ரேலுக்கான தன்னுடைய நன்றி அறிவித்தலையும், அதற்கான விசுவாசத்தினையும இன்னமும் காட்டிக் கொண்டு தான் இருக்கின்றது.

இஸ்ரேலியர்கள் இலங்கைக்குள் இன்றைக்கு இலங்கையின் குடிமக்களைத் தாண்டிய சுதந்திரந்தோடு இருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டு தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகின்றது. இஸ்ரேலியர்கள் தொழில் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும், நிலங்களை கொள்வனவு செய்வதற்குமான உரிமை சட்டத்துக்குப் புறம்பாக வழங்கப்பட்டிருக்கின்றது. அல்லது அவை தொடர்பில் இலங்கை அரசு கண்ணை மூடிக்கொண்டு அமைதியாக இருந்து கொள்கின்றது. இந்த நிலைக்கு எதிராக குரல்களை எழுப்பினால், அவற்றை அடக்கும் பொறிமுறைகள் தொடர்பில் இலங்கை அரச இயந்திரம் கவனம் செலுத்துகின்றது.

இதில் இன்னொரு முக்கிய விடயம் என்னவெனில், கிழக்கில் முஸ்லிம்கள் அதிகமுள்ள பகுதிகளை நோக்கிய இஸ்ரேலியர்களின் வருகையாகும். அது தேவையற்ற பதற்றத்தை உண்டுபண்ணுகின்றது. இவையெல்லாம், இலங்கை அரசின் ஆசீர்வாதம் இல்லாமல் நடைபெறவில்லை. தன்னையொரு இடதுசாரிய – சாமானிய மக்களின் அரசாங்கம் என்று சொல்லிக் கொள்ளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும்கூட இஸ்ரேலியர்களின் மனங்கள் நொந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கின்றது.

பலஸ்தீனத்தின் காசா கரை மக்கள், ஈழத் தமிழ் மக்கள் முள்ளிவாய்க்கால் கரையில் எதிர்கொண்ட இன அழிப்பினை ஒத்த இன அழிப்பினைச் சந்தித்து நிற்கிறார்கள். இஸ்ரேல் காசா கரையை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் முழுமையாக கொண்டு வந்து, பஸ்தீனத்தின் தேசக்கனவினை கரைப்பது வரையில், தன்னுடைய தாக்குதல்களை நிறுத்தப் போவதில்லை என்று அறிவித்துவிட்டது. நாளும் பொழுதும் குண்டுவீச்சுக்களினால் ஆயிரக்கணக்கான காசாக் கரை மக்கள் கொல்லப்படுகிறார்கள். அத்தோடு, இஸ்ரேலின் உணவு விநியோக தடையினால், பசி பட்டினியினால், நூற்றுக்கணக்கான குழந்தைகள் உள்ளிட்டவர்களின் உயிரிழப்புக்கள் பதிவு செய்யப்படுகின்றன. முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட மனித மாண்புகள் ஏதுமற்ற இன அழிப்பு ஆக்கிரமிப்பினை இலங்கை நடத்தி முடித்தது. ராஜபக்ஷக்கள் அந்தக் கொடூரங்களுக்கு தலைமையேற்றிருந்தார்கள். ஆனால், அந்தக் கொடூரங்கள் தொடர்பில் இலங்கையின் எந்த அரசாங்கமும் எதிர்நிலைப்பாடுகளை எடுத்ததில்லை. அந்தக் கொடூரங்களை அங்கீகரித்தே செயற்பட்டிருக்கின்றன. கடந்த காலத்தில் இலங்கை அரசினால், ஆயுத முனையில் அழித்து ஒழிக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் முகமான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சியில் இருக்கின்ற போதிலும், ராஜபக்ஷக்களின் கொடூரங்களை அங்கீகரித்தே வந்திருக்கிறார்கள். இல்லையென்றால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில், இலங்கையில் நடைபெற்றது இன முரண்பாடுகள் தொடர்பிலான போராட்டம் இல்லை என்று எப்படி அவர்களினால் அறிவிக்க முடிகின்றது? அதாவது, தமிழ் மக்களின் அரசியல் விடுதலைப் போராட்டத்தை கடந்த கால அரசாங்கங்கள் அறிவித்தமை போன்றே அநுரவின் அரசாங்கமும் பயங்கரவாதப் போராட்டமாக அறிவித்திருக்கின்றது. பயங்கரவாதப் போராட்டத்தினை இலங்கை முடிவுக்கு கொண்டு வந்திருக்கின்ற நிலையில், அது தொடர்பில்

தொடர்ச்சி▼



# அநுரவின் பலஸ்தீனத்துக்கான அறிவிப்பும் ஈழத் தமிழர்களும்!

தொடர்ச்சி▲

விசாரணைகளை சர்வதேச ரீதியிலோ, கலப்புப் பொறிமுறை ஊடாகவோ முன்னெடுக்கத் தேவையில்லை. அதனை உள்நாட்டிலேயே தாங்கள் பார்த்துக் கொள்வதாக அநுர அரசாங்கம் ஐக்கிய நாடுகளுக்குள் வாதிடுகின்றது. அதாவது, தேசிய இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை என்பதை அநுர அரசாங்கம் சர்வதேச அரங்கில் கூறி வருகின்றது. ராஜபக்ஷக்கள் தாங்கள் நடத்தியது பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் என்று அறிவித்தாலும், நாட்டில் இனமுரண்பாடுகள் இருக்கின்றன என்பதை அவ்வப்போது ஒப்புக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதனை சந்திரிக்காவும், ரணிலும் கூட ஏற்றிருக்கிறார்கள். ஆனால், சாமானிய முகத்தோடு தங்களை மாற்று சக்திகளாக காட்டிக் கொண்டு தமிழ் மக்களின் வாக்குகளையும் பெற்று ஆட்சிக்கு வந்திருக்கும் அநுர அரசாங்கம், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பற்றி பேசுவதை தவிர்க்கின்றது. அது, இன முரண்பாடுகள் – தேசிய அரசியல் பிரச்சினைகள் பற்றி நிராகரித்துக் கொண்டு செயற்படுகின்றது.

அந்த அரசாங்கம்தான் இன்றைக்கு பலஸ்தீன தேசத்தை அங்கீகரிப்பதாக அறிவித்திருக்கின்றது என்ற முரணும் நிகழ்ந்திருக்கின்றது.

காசா கரையில் இஸ்ரேல் நிகழ்த்திக் கொண்டிருக்கும் இன அழிப்புக்கு இன்றைக்கு வெளிப்படையான ஆதரவினை அமெரிக்கா மட்டுமே வழங்கிக் கொண்டிருக்கின்றது. அமெரிக்காவின் இணக்க நாடுகளே, காசா விடயத்தில், அமெரிக்காவின் நிலைப்பாடுகளை புறந்தள்ளிக் கொண்டுவிட்டன. பிரித்தானியா, கனடா தொடங்கி இன்றைக்கு பல டசின்களுக்கும் மேற்பட்ட நாடுகள் பலஸ்தீனத்தை ஒரு தேசமாக அங்கீகரித்துவிட்டன. தற்போது நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அமர்வு, பலஸ்தீன தேசத்தை அங்கீகரிப்பது மற்றும் காசா கரையில் நிகழ்த்தப்படும் இன அழிப்பினை கண்டிப்பது தொடர்பிலான அமர்வு போன்றே நடைபெற்று வருகின்றது. இந்த ஓட்டத்தில் தன்னையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்கிற போக்கிலேயே, இலங்கையும் பலஸ்தீன தேசத்தினை அங்கீகரிப்பதாக அறிவித்து அநுர அரசாங்கம் நல்ல பிள்ளை வேடம் போடப் பார்க்கின்றது. தொடர்ச்சியாக தென் இலங்கை அரசினால் அடக்கி ஒடுக்கப்படும் ஈழத் தமிழ் மக்கள் போன்றே, பலஸ்தீன மக்களும் இஸ்ரேலினால் அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள். அவர்களின் நிலங்கள் சுரண்டப்படுகின்றன. அவர்களின் வாழ்தலுக்கான உரிமை மறுதலிக்கப்படுகின்றது. பலஸ்தீன மக்களுக்கும் ஈழத் தமிழ் மக்களுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் இல்லை. ஆக்கிரமிப்பு, அத்துமீறல், இன அழிப்பு என்கிற பயங்கரங்களுக்கு எதிராக ஒவ்வொரு நொடியும் போராட வேண்டியிருக்கின்றது. அவ்வாறான நிலையில், பலஸ்தீனத்தை இவ்வளவு நாடுகள் தேசமாக அங்கீகரிக்கின்றன என்பது வரவேற்கக் கூடியது. ஆனால், இந்த அங்கீகாரம், பலஸ்தீனியர்கள் அவர்களின் நிலங்களில் இருந்து ஒட்டுமொத்தமாக அழித்து ஒழிக்கப்பட்ட பின்னர்தான் கிட்டத்தட்ட நிகழுகின்றதோ என்கிற கோபமும் எரிச்சலும் மேலிடுகின்றது. அது, ஈழத் தமிழர்களுக்கு எதிராக சர்வதேச நாடுகள் தென் இலங்கையோடு நின்று ஆடிய சதியாட்டத்தை ஒத்ததாக இருக்கின்றது.

அநுர அரசாங்கம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வுக்குள்ளும் இராஜதந்திர ரீதியிலும் தன்னை நோக்கிய பாரிய நெகிழ்வுப் போக்கினை கட்டமைத்துப் பெற்றிருக்கின்றது. அது, நல்லாட்சிக் காலத்தில் ரணில் சர்வதேச நாடுகளை கையாண்டதிலும் பார்க்க மேலானது. எதிர்பார்த்ததைக் காட்டிலும் அநுர அரசாங்கத்தினை சர்வதேசமும், அதன் இயங்கு சக்திகளும் மிகுந்த நெகிழ்வுப் போக்கோடு அணுகுகின்றன. இலங்கை தொடர்பிலான கடந்த கால ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானங்களோடு ஒப்பிடுகையில், இம்முறை நிறைவேற்றப்பட இருக்கும் தீர்மானம் மிகுந்த விட்டுக்கொடுப்புக்கள் கொண்டது. இலங்கை அரசினை, பதில் சொல்வதற்கே வலியுறுத்தாத தன்மைகளைக் கொண்ட சரத்துக்கள் கொண்டவை. தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும், தலைவர்களும் தங்களுக்குள் மல்லுக்கட்டிக் கொண்டிருக்க, அநுர அரசாங்கம் சர்வதேசத்தினை தெளிவாக வெட்டி ஓடிக் கொண்டிருக்கின்றது. அநுர அரசாங்கம், சீன சார்பிலானது என்கிற பார்வை மேற்கு நாடுகளிடம் இருக்கும். அதனை வைத்து, கையாளலாம் என்று தமிழ்த் தலைவர்கள் தங்களுக்குள் முட்டிக் கொண்டிருக்க, அநுர அரசாங்கம் இலங்கை அரசு கடந்த காலத்தில் நிகழ்த்திய இன அழிப்புக்கு வெள்ளையடித்து நீர்த்துப் போகச் செய்கின்றது. தென் இலங்கையில் யார் ஆட்சி அதிகாரத்தில் ஏறினாலும், தமிழ் மக்களுக்கு எதிரான நிலைப்பாடுகளில் ஒற்றைச் சிந்தனையோடுதான் நிற்கிறார்கள். அதற்கு ஒருபோதும் தேசிய மக்கள் சக்தி

தொடர்ச்சி▼



# அநுரவின் பலஸ்தீனத்துக்கான அறிவிப்பும் ஈழத் தமிழர்களும்!

தொடர்ச்சி▲

விதிவிலக்காக இருக்காது என்று ஆரம்பத்திலேயே இந்தப் பத்தியாளர் எச்சரித்திருந்தார். இன்று, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், ஈழத் தமிழர்களின் அரசியல் போராட்டத்தினை பயங்கரவாதப் போராட்டமாக சித்திரித்ததில் இருந்து தெளிந்து கொள்ள முடியும். தென் இலங்கையில் யார் ஆட்சிப் பீடமேறினாலும், அந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களை எதிரிகளாகக் கருதி அழித்து ஒழிப்பதிலேயே கவனம் செலுத்தும். அதனைத்தான் இப்போது, அநுர அரசாங்கமும் செய்கின்றது. தமிழ் மக்கள் அதனைப் புரிந்து கொள்ளாமல், தற்போதுள்ள அரசாங்கத்தினை புரட்சிக்காரர்கள் – மாற்று சக்தியினர் என்ற வார்த்தைகளில் மயங்கினால், எஞ்சியுள்ள கோவணத்தையும் தென் இலங்கையிடம் பறிகொடுக்க வேண்டி வரும்.

இரட்டை நிலைப்பாடுகள் எடுப்பதில், இலங்கை அரசு எப்போதுமே முதன்நிலையில் இருந்திருக்கின்றது. தென் இலங்கை மக்களுக்கு ஒரு நீதி, தமிழ் – முஸ்லிம் மக்களுக்கு இன்னொரு நீதி என்பதில், அநுர அரசாங்கமும் விதிவிலக்கின்றி செயற்படுகின்றது. இன்றைக்கு பலஸ்தீன தேசத்தை அங்கீகரிப்பதாக அநுர அறிவித்துவிட்டு, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தினை பயங்கரவாதமாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை அமர்விலும், அதற்கான பக்க அறைச் சந்திப்புக்களிலும் அடையாளப்படுத்துவது கவனத்தில் கொள்ளத்தக்கது. தென் இலங்கையிடம் இருந்து எமக்கான உரித்துக்களை அடைவதற்கான போராட்டத்தை விழுந்தாலும் எழுந்தாலும் தமிழ் மக்களே நடத்தியாக வேண்டும். எமக்காக யாரும் வரப்போவது இல்லை. அந்த பேருண்மையை உணர்ந்து கொண்டாலே போதும். தமிழ்த் தேசிய அரசியல் இயங்குநிலை தடுமாற்றங்களின்றி முன்னோக்கிச் செல்லும்.

# மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நுண்நிதி நிறுவனங்களின் சலுகைகளை பிரதேசசபை ஏற்கக்கூடாது என வலியுறுத்தல்

(த.சுபேசன்)

பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நுண்நிதி நிறுவனங்கள் தமது விளம்பரங்களை காட்சிப்படுத்துவதற்காக பிரதேசசபைக்கு வழங்கும் சலுகைகளை பிரதேசசபை ஏற்கக் கூடாது என சாவகச்சேரிப் பிரதேசசபை உறுப்பினர் செ.மயூரன் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் பிரதேசசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனை வலியுறுத்தியிருந்தார்.


இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:–

ஒரு சில நுண் நிதி நிறுவனங்கள் மூலம் கிராம மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் தமது விளம்பரத்தை காட்சிப்படுத்துவதற்காக அண்மையில் பிரதேசசபைக்கு ஐந்து வீதிப் பெயர் பதாகைகளை அன்பளிப்பாக வழங்கிவிட்டு அதில் தமது விளம்பரத்தையும் பொறித்திருக்கின்றனர் என அறிய முடிகின்றது.

மேலும் அவர்கள் தாம் அன்பளிப்புச் செய்யாத பெயர் பலகைகளில் கூட தமது விளம்பரத்தைப் பொறித்திருக்கின்றனர் சக பிரதேசசபை உறுப்பினராகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

எனவே பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் நுண்நிதி நிறுவனங்கள் தமது வியாபார நோக்கில் ஏதேனும் அன்பளிப்புக்களை மேற்கொண்டால் அதனை பிரதேசசபை நிராகரிக்க வேண்டும். நுண்நிதி நிறுவனங்களால் பலர்



உயிரிழந்துள்ளனர். – எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியிருந்தார்.

















# ‘தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்’ வீரகத்தி தனபாலசிங்கத்தின் நூல் வெளியீடு

பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் எழுதிய “தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்” நூல் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் கொழும்புத் தமிழச் சங்கத்தில் நடைபெற்றபோது எழுத்தாளர் வசந்தி தயாபரன் தலைமையுரையையும்,எழுத்தாளர்வி.ரி.இளங்கோவன் வெளியீட்டுரையையும், தகவல் அறியும் உரிமை ஆணைகுழு உறுப்பினர் ஏ எம். நஹியா, கிழக்கு பல்கலைக் கழக நுண்கலைத்துறை பேராசிரியர் எஸ். ஜெய்சங்கர், ஆய்வாளர் தெ. மதுசூதனன் சமூக, அரசியல் செயற்பாட்டாளர் யதீந்திரா, ஆகியோர் கருத்துரைகளையும், நூலாசிரியர் நன்றியுரையையும் நிகழ்த்துவதையும் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவி சுகந்தி இராஜகுலேந்திரா நூலின் முதற்பிரதியை பெற்றுக்கொள்வதையும் சபையோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் கானலாம்.









# கரூரில் விஜய் பிரசாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 39 பேர் சாவு!

த.வெ.க. தலைவர் விஜய்யின் கரூர் பிரச்சாரத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலின் காரணமாக 39 பேர் உயிரிழந்தனர். குழந்தைகள், பெண்கள் உள்பட 80 இற்கும் மேற்பட்டோருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

த.வெ.க. தலைவர் விஜய் நேற்று இரவு 7 மணியளவில் கரூரில் பரப்புரை மேற் கொண்டார். அவர் பரப்புரை மேற் கொண்டவேலுச்சாமிபுரத்தில்ஆயிரகணக் கானோர் திரண்டிருந்தனர். அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசல் காரணமாக மக்கள் பலர் மயக்கமடைந்தனர். விஜய் பேசிக் கொண்டிருந்த போதே மயக்க மடைந்தவர்கள் நோயாளர் காவுவண்டி களில் கரூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இந்நிலையில், விஜய் பரப்புரையில் மயக்கமடைந்தவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்தது. 80 இற்கும் மேற்பட்டோர் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

மேலும், சிலர் தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கரூர் அரசு மருத்துவமனைக்கு கூடுதல் மருத்துவர்களும் வரவழைக்கப்பட்டுள்ள னர். மயக்கமடைந்து சிகிச்சை பெறுப வர்களில் சிலருக்கு செயற்கை சுவாசக் கருவி பொருத்தப்பட்டுள்ளது.

கரூர் அரசு மருத்துவமனைக்கு மாவட்ட ஆட்சியர், முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகி யோர் நேரில் வருகை தந்து, பாதிக்கப பட்டவர்களை நேரில் சந்தித்தனர்.

கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்புகள் குறித்த செய்தியாளர்களின் கேள்விக ளுக்கு த.வெ.க. தலைவர் விஜய் பதில் ஏதும் அளிக்காமல் சென்றார்.

கரூரில் தனது பிரச்சாரம் முடிந்த கையோடு திருச்சி சென்ற விஜய், அங்கிருந்து தனி விமானம் மூலம் சென்னை செல்வதற்காக திருச்சி விமா னம் நிலையம் சென்றடைந்தார். அங்கே கூடியிருந்த செய்தியாளர்கள் விஜய்யின் காரை சூழ்ந்து கொண்டு அவரிடம் கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்புகள் குறித்து கேள்வி எழுப்ப முயன்றனர். ஆனால் விஜய் அவர்களின் கேள்விகள் எதற்கும் பதிலளிக்காமல் சென்றுவிட்டார்.

இந்த விபத்துக்கு பிரதமர் மோடி, முதல்வர் ஸ்டாலின், மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத், நடிகர்கள் ரஜினிகாந்த், கமல்ஹாசன் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, போர்க்கால அடிப்படை யில் தேவையான உதவியினைச் செய்து தரும்படி உத்தரவிட்டிருப்பதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் வெளி யிட்டுள்ள அறிக்கையில்,

“கரூரிலிருந்து வரும் செய்திகள் கவலையளிக்கின்றன. கூட்ட நெரிசலில் சிக்கி மயக்கமுற்று மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுள்ள பொது மக்களுக்குத் தேவையான உடனடி சிகிச் சைகளை அளித்திடும்படி, முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, அமைச்சர் மா.சுப்பிரமணியன், மாவட்ட ஆட்சியரை தொடர்பு கொண்டு அறிவுறுத்தியுள்ளேன்.

அருகிலுள்ள திருச்சி மாவட்டத் தைச் சேர்ந்த அமைச்சர் அன்பில் மகேஸி டம் அவர்களிடமும் போர்க்கால அடிப் படையில் தேவையான உதவியினை செய்து தரும்படி உத்தரவிட்டிருக்கிறேன். அங்கு, விரைவில் நிலைமையைச் சீராக்கும் நடவடிக்கைகளை மேற் கொள்ள ஏ.டி.ஜிபியிடமும் பேசியிருக் கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.



# இதயம் நொறுங்கிப் போய் இருக்கிறேன்: நெரிசல் சம்பவத்துக்கு விஜய் இரங்கல்





இதயம் நொறுங்கிப் போய் இருக்கிறேன் தாங்க முடியாத, வார்த்தைகளால் சொல்ல முடியாத வேதனையிலும் துயரத்திலும் உழன்று கொண்டிருக்கிறேன் என்று கரூர் நெரிசல் சம்பவத்துக்கு த.வெ.க. தலைவர் விஜய் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“இதயம் நொறுங்கிப் போய் இருக்கிறேன். தாங்க முடியாத, வார்த்தைகளால் சொல்ல முடியாத வேதனையிலும் துயரத்திலும் உழன்று கொண்டிருக்கிறேன்.

கரூரில் உயிரிழந்த எனதருமை சகோதர சகோதரிகளின் குடும்பங்களுக்கு என் ஆழ்ந்த அனுதாபங்களையும், இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன். மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோர், விரைவில் குணமடைய பிரார்த்திக்கின்றேன்.” இவ்வாறு விஜய் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்துக்கு பிரதமர் மோடி, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எடப் பாடி பழனிசாமி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# உயிரிழந்தோர் குடும்பத்துக்கு 10 லட்சம் ரூபா நிவாரணம்

## முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்





கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 10 லட்சம் இந்திய ரூபா முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும், மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சை பெற்று வரும் நபர்களுக்கு தலா 1 லட்சம் இந்திய ரூபா வழங்கவும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

மேலும், திருச்சி, சேலம், திண்டுக்கல் ஆட்சியர்கள் கரூருக்கு சென்று மீட்பு, நிவாரணப் பணிகளில் ஈடுபடியும் அவர் அறிவித்தியுள்ளார்.

இதற்கிடையில் முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“நேற்று கரூரில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் அரசியல் பரப்புரை கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி இதுவரை 8 குழந்தைகள் 16 பெண்கள் உட்பட 36 பேர்கள் உயிரிழந்துள்ளதாக தகவல் அறிந்து சொல்லொண்ணாத் துயரமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும் இச்சம்பவம் குறித்து முறையான விசாரணை மேற்கொண்டு அரசுக்கு அறிக்கை அளிக்க ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையம் உடனடியாக அமைக்கப்படும். நான் இன்றிரவே கரூர் சென்று மேற்படி துயர சம்பவத்தில் உயிரழந்தவர்களின் குடும்பத்தினரை சந்தித்து, ஆறுதல் தெரிவிக்கவும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை சந்திக்கவும் உள்ளேன்.” என்று தெரிவித்துள்ளார்.

# விலைமதிப்பற்ற உயிர்கள் பறிபோயுள்ளன: நெரிசல் சம்பவத்துக்கு ராகுல் காந்தி இரங்கல்



த.வெ.க. தலைவர் விஜய்யின் கரூர் பிரச்சாரத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 31 பேர் உயிரிழந்த சம்பவத்துக்கு காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ராகுல் காந்தி வெளியிட்டுள்ள இரங்கல் பதிவில்,

“தமிழ்நாட்டின் கரூரில் நடந்த ஒரு அரசியல் கூட்டத்தில் நடந்த துயரச் சம்பவம் மிகவும் வருத்தமளிக்கிறது. இதில் பல விலைமதிப்பற்ற உயிர்கள் பறிபோயுள்ளன. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த இரங்கல். காயமடைந்த அனைவரும் விரைவில் குணமடைய விழைகிறேன்.

பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் அனைத்து உதவிகளை வழங்கவும், நிவாரணம் மற்றும் மீட்பு முயற்சிகளில் அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றவும் காங்கிரஸ் தொண்டர்களையும் தலைவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்..” என்று குறிப்பிட்டுள்ளார்.

# அனைத்து நாடுகளும் பலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்க வேண்டுமென கூட்டறிக்கை வெளியீடு



காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களைக் கடுமையாகக் கண்டிப்பதாகக் குறிப்பிட்டு இந்தியா, தென்னாபிரிக்கா, பிரேசில் ஆகிய நாடுகள் கூட்டறிக்கை வெளியிட்டுள்ளன.

மூன்று நாடுகளின் வெளி விவகார அமைச்சர்கள் நியூயோர்க்கில் நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அனைத்து உலக நாடுகளும் பலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்க வேண்டும் எனவும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# டொனால்ட் ட்ரம்ப் தலையிடாமல் இருந்திருந்தால் 'ஒபரேஷன் சிந்தூர்' பேரழிவை ஏற்படுத்தியிருக்கும்

## பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் தெரிவிப்பு



டொனால்ட் ட்ரம்ப் சரியான நேரத்தில் தலையிடாமல் இருந்திருந்தால், ஒபரேஷன் சிந்தூர் போர் பேரழிவை ஏற்படுத்தியிருக்கும் என பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 80 ஆவது அமர்வின், பொது விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதில், டொனால்ட் ட்ரம்ப் மற்றும் அவரது குழுவினர் காட்டிய தீவிர பங்களிப்பிற்குத் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் பாகிஸ்தான் பிரதமர் தெரிவித்தார்.

மேலும், உலகில் அமைதியை மேம்படுத்துவதில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் அற்புதமான மற்றும் அவரது சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக, பாகிஸ்தான் அவரை அமைதிக்கான நோபல் பரிசுக்குப் பரிந்துரைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், ஒபரேஷன் சிந்தூர் தாக்குதல், இரண்டு நாட்டு இராணுவ அதிகாரிகளின் நேரடி பேச்சுவார்த்தைகளுக்கு பின்னரே, போர் நிறுத்த ஒப்பந்தம் எட்டப்பட்டதாகவும், இதில் மூன்றாம் தரப்பு தலையீடு எதுவும் இல்லை எனவும் இந்தியா தொடர்ந்தும் மறுத்து வருகிறது.

## காசா ஆதரவுப் போராட்டத்தில் பங்கேற்பு:

# கொலம்பிய ஜனாதிபதியின் விசாவைப் பறித்தது அமெரிக்கா





காசாவில் இஸ்ரேல் மேற்கொள்ளும் மிலேச்சத்தனமாக தாக்குதலை கண்டித்தும் காசா மக்களுக்கு ஆதரவாகவும் அமெரிக்காவில் நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்ற கொலம்பியா ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ விசாவை அமெரிக்கா இரத்து செய்துள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க்கின் மன்ஹாட்டனில் உள்ள ஐ.நா. தலைமையகத்திற்கு வெளியே பாலஸ்தீன ஆதரவு குழுவினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்த காசா ஆதரவு போராட்டத்தில் பங்கேற்ற கொலம்பியா ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ பேசுகையில்,

"ட்ரம்பின் கட்டளைகளை மீறுங்கள். மனிதகுலத்தின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியுங்கள்.

பாலஸ்தீனியர்களை விடுவிப்பதற்கு முன்னுரிமை அளிக்கும் உலகளாவிய ஆயுதப் படை உருவாக வேண்டும். இந்தப் படை அமெரிக்காவை விட பெரியதாக இருக்க வேண்டும்."என தெரிவித்தார்.

முன்னதாக, ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் பேசுகையில், "காசாவில் இஸ்ரேலின் போரை கடுமையாக குஸ்டாவோ பெட்ரோ எதிர்த்தார்.

அவர் "காசாவில் இனப்படுகொலைக்கு அமெரிக்கா உடந்தையாக இருக்கிறது. கரீபியன் கடலில் போதைப்பொருள் படகுகள் மீது அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது தொடர்பாக குற்றவியல் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்" என்றார்.

இவர் ட்ரம்பிற்கு எதிரான கருத்துக்களை தெரிவித்ததால் அவரது விசாவை அமெரிக்கா ரத்து செய்துள்ளது.

கொலம்பியா ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோவின் பொறுப்பற்ற கருத்துக்களால் அவரது விசாவை நாங்கள் ரத்து செய்துள்ளோம் என அமெரிக்க வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 28.09.2025




இன்று சவால்களை சந்திக்க அமைதியான போக்கை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியுடனும் கட்டுப்பாடுடனும் இருக்க வேண்டும்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க மாட்டீர்கள். சக பணியாளர்கள் ஆதரவாக இருக்க மாட்டார்கள். அவர்களால் சில தொல்லைகள் ஏற்படும்.

உங்கள் துணையிடம் குழப்பமான உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் சில விரும்பத்தகாத தருணங்கள் காணப்படும்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக செலவு செய்ய நேரும். இதனால் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் பணப்பற்றாக்குறை ஏற்படும்.

பதற்றம் காரணமாக கால் வலியால் அவதிப்பட நேரலாம்.




இன்று மிதமான வளர்ச்சி காணப்படும். பொறுமையும் உறுதியும் இருந்தால் இலக்கில் வெற்றி அடையலாம்.

நேரமின்மை காரணமாக பணியில் தாமதங்கள் ஏற்படலாம். பணியில் நீங்கள் தவறுகள் செய்ய நேரலாம். பணிகளை கவனமாகச் செய்ய வேண்டும்.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்த இயலாத சூழ்நிலை காணப்படும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களை விலக்க வேண்டும்.

பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று பண வரவிற்கான அதிர்ஷ்டம் காணப்படாது. தேவையற்ற விஷயங்களுக்காக இன்று பணம் செலவு செய்ய நேரும்.

மன உளைச்சல் காரணமாக தொடை மற்றும் கால் விரல்களில் வலி ஏற்படலாம்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள். இன்று மன அமைதியுடன் காணப்படுவீர்கள். இன்று எடுக்கும் முடிவுகள் நற்பலன்களைத் தரும்.

பணிகள் சுமுகமாக நடக்கும். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.பணியில் உங்கள் செயல்திறனுக்கான அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். இரவரும் நல்ல புரிந்துணர்வை பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நிதி நிலையை நன்கு சமாளிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று மனதில் பதட்டங்கள் அதிகமாக காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது அல்லது புதிய முயசிகள் தவிர்க்கப்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் தியானம் ஆறுதல் தரும்.

பணிகளைக் கையாள்வது சவாலாக இருக்கும். நேரம் செலவு ஆகும். உங்கள் கீழ் பணி புரிபவர்களுடன் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் பொறுமை அவசியம்.

மனதில் இருக்கும் பட்ட நிலை காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள். அமைதியாக உங்கள் உணர்வுகளை உங்கள் பிரியமானவரிடம் வெளிப்படுத்த வேண்டும்.




இன்று மகிழ்வாக இருப்பதற்கு சாதகமான நாளாக அமையாது. ஆன்மீகப் பயணங்கள் ஆறுதல் தரும். இன்றைய சவால்களை தன்னம்பிக்கையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியில் கூடுதல் பொறுப்புகள் ஏற்க நேரும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் இருவரிடையே கருத்து வேறுபாடு காணப்படும் இதனால் உங்கள் துணையுடன் சிறந்த உறவை பராமரிக்க இயலாது.

பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை சாதுர்யமாகவும் கவனமாகவும் கையாள வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக இன்று கால் வலி உபாதைகள் ஏற்படலாம்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். முன்னேற்றம் பெறுவதற்கான வலிமையையும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். இன்று அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணிகளை மகிழ்வுடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை காணப்படும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்.




இன்று முனேற்றகரமான பலன்கள் கிடைக்கும். பயணங்கள் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மூலம் மனத் தெளிவு கிடைக்கும். இதனால் கடினமான சூழ்நிலையையும் நீங்கள் எளிதாக கையாள்வீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இன்று மும்மரமான பணிகள் காணப்படும். கடின உழைப்பின் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நெருக்கம் காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி திருப்தியை அளிக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று மகிழ்ச்சி மற்றும் உற்சாகமான நம்பிக்கை காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.09.2025




இன்று முனேற்றகரமான பலன்கள் கிடைக்கும். பயணங்கள் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மூலம் மனத்தெளிவு கிடைக்கும். இதனால் கடினமான சூழ்நிலையையும் நீங்கள் எளிதாக கையாள்வீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இன்று மும்மரமான பணிகள் காணப்படும். கடின உழைப்பின் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நெருக்கம் காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி திருப்தியை அளிக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று மகிழ்ச்சி மற்றும் உற்சாகமான நம்பிக்கை காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




பல தடைகளுக்கு பிறகு வெற்றியைக் காண்பீர்கள். கவலைகளை நீக்கி மனதை அமைதியாக வைத்திருங்கள்.

இன்று பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் கவனமாக பணியாற்ற வேண்டும். பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள்.

உங்கள் துணையிடம் பாதுகாப்பின்மை உணர்வு கொள்வீர்கள். இது மகிழ்ச்சியைக் குறைக்கும். உங்கள் வேறுபாடுகளைக் களைய முயலுங்கள்.

இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது. அதிக மன உளைச்சல் காரணமாக கால்களில் வலி காணப்படும்.




இன்று சாதகமான நாள். தன்னம்பிக்கை நிறைந்து காணப்படுவீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

பணியிடத்தில் நல்ல பெயர் எடுப்பீர்கள். உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உறவுநிலை சுமாராக இருக்கும். உங்கள் துணையுடன் அனுசரித்துப் போவது மற்றும் திறமையான தொடர்பாடல் நல்லது.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். பணவரவுக்கான சாத்தியம் உள்ளது.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இல்லாமல் திடமான ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று பொறுமையுடன் இருக்க வேண்டிய நாள். சூடான விவாதத்தை தடுக்க உரையாடுவதற்கு முன் ஒன்றிக்கு இரண்டு முறை நன்கு யோசிக்கவும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும்.

உங்களுக்கு கொடுத்த பணிகளை குறித்த நேரத்திலோ அல்லது அதற்கு முன்போ முடிப்பீர்கள். மிகுந்த உற்சாகத்துடன் பணிகளை முடிப்பீர்கள்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்களுக்குள் கருத்து வேறுபாடு காணப்படும். இதனைத் தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக நீங்கள் பணத்தை இழக்கலாம்.

# மன்னார் மக்களை மிலேச்சத்தனமாக தாக்கியுள்ளது அநுர அரசாங்கம்

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி கண்டனம்

அநுர திசாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி அரசு, மக்களின் கோரிக்கைகளையும் எதிர்ப்பு போராட்டங்களையும் கண்டுகொள்ள மாட்டோம், மாறாக ஆட்சிபீடம் ஏறுவதற்கு உதவிய இந்திய பிராந்திய மேலாதிக்க சக்திக்கும் பெருவணிக அதானி கம்பனிக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் மட்டுமே விசுவாசமாக இருப்போம் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளது.

காற்றாலை மற்றும் கனிய அகழ்வு திட்டத்துக்கு எதிராக 55 நாள்களுக்கு மேல் போராடிக் கொண்டிருக்கும் மன்னார் தீவு மக்களை அடித்து துன்புறுத்தி புரிந்த கீழ்த்தரமான செயல் மூலம் நிரூபித்துள்ளார்கள்.

இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மன்னார் தீவு மக்களின் தொடர்ச்சியான போராட்டம் காரணமாக மன்னார்




காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வு திட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தி மக்களின் கருத்துக்களை கேட்டறிந்து முடிவுக்கு வருவதாக ஜனாதிபதி அறிவித்திருந்த நிலையில், எரிசக்தி அமைச்சர் தலைமையிலான குழுவினர் மன்னார் தீவுக்கு சென்று மக்களிடம் கருத்து கேட்ட போது, மக்கள் அத்திட்டத்தை மிகக் கடுமையாக எதிர்த்துள்ளனர். அண்மையில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகவும் போராடி முழு நாட்டுக்கும் தமது கோரிக்கைகளை வெளிப்படுத்தி இருந்தனர்.

இவை அனைத்தையும் புறந்தள்ளி காற்றாலை திட்டத்துக்கு உரிய டர்பைன் மற்றும் விசிறிகளை நேற்று இரவு மன்னார் தீவுக்கு கொண்டு வந்துள்ளனர். அதனை தடுக்க முயன்ற பெண்கள், இளைஞர்கள், பாதிரிமார்கள் உட்பட மக்களை அடித்து காயப்படுத்திகேவலமானஅரசஅடக்குமுறையை அனுரவின் போலீஸ் படை மேற்கொண்டதை மிக வன்மையாக கண்டிப்பதாக குறிப்பிட்டுள்ள சி.கா.செந்திவேல் இந்தச் செயல் மூலம் அரசு உழைக்கும் மக்கள் பக்கம் இல்லை என்பதை அழுத்தம் திருத்தமாக பதிவுச் செய்திருக்கின்றனர்.

மின்சார துறையின் ஏகபோக அதிகாரத்தை அதானி குற்றங்கும்பல் கம்பெனிக்கு வழங்கி மின்சார கட்டணத்தை உயர்த்தி மக்களை சுரண்டும் திட்டத்தைக்க கைவிட வேண்டும். இந்தத் திட்டத்தைத் தடுத்து நிறுத்தத் தொடர்ந்து போராடும் மன்னார் தீவு மக்களோடு இணைந்து நாட்டின் ஏனைய அனைத்து சக்திகளும் போராட முன்வர வேண்டும்.- என்றுள்ளது.